# காயல்பட்டணம் நகராட்சி
## ஏப்ரல் மாத மன்றப்பொருள்

மன்றப்பொருள்; 1 **தீர்மான எண் :** 2007 அனுமதிக்கப்பட்டது

மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவு படி, காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 16.4.2020 அன்று தினத்தந்தி பத்திரிக்கையில் விளம்பரம் விளம்பரம் செய்த வகைக்கு செலவு தொகையாக ரூ.23688/– னை ஆணையரின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலககுறிப்பு–

மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 1142/2019/இ1

மன்றப்பொருள்; 2 **தீர்மான எண் :** 2008 அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி ஏப்ரல் 2020ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

மன்றப்பொருள்; 3 **தீர்மான எண் :** 2009 அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, மாவட்ட ஆட்சியர் மற்றும் பொது சுகாதார துறை, தூத்துக்குடி மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படி, இந்நகராட்சி பகுதியில் வெளிநாடுகளில் இருந்து வரும் நபர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் வகையிலும் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில், இது குறித்த விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், ஆட்டோ மூலம் விளம்பர செய்வதற்கும், பொது இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் அணிவதற்க்காக முககவசம் மற்றும் இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும், அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். 3336/ஜே2/2020 நாள் 09.04.2020ன்படி பெறப்பட்ட இரு தவணை தொகை முறையே ரூ.3.00இலட்சம் மற்றும் ரூ.13.00 இலட்சம் அகியவற்றில் (மொத்தம் 16.00 இலட்சம்) இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4

மன்றப்பொருள்; 4 **தீர்மான எண் : 2010** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் கோரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக, மாவட்ட ஆட்சியர் மற்றும் பொது சுகாதார துறை, தூத்துக்குடி மூலம் அறிவுறுத்தப்பட்டதன் படி, இந்நகராட்சி பகுதியில் வெளிநாடுகளில் இருந்து வரும் நபர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் வகையிலும் பொது மக்கள் கூடும் முக்கிய இடங்களில், இது குறித்த விழிப்புணர்வு விளம்பர பதாகைகள் வைப்பதற்கும், ஆட்டோ மூலம் விளம்பர செய்வதற்கும், பொது இடங்களில் தெளிப்பதற்கு ஏற்றவாறு கிருமிநாசினிகள் மற்றும் தூய்மை பணியாளர்கள் அணிவதற்க்காக முககவசம் மற்றும் இது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும், அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று கொள்முதல் செய்வதற்கும் அதற்கான செலவினங்களை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். 3336/ஜே2/2020 நாள் 23.04.2020ன்படி பெறப்பட்ட 3வது தவணை தொகை ரூ.10.00 இலட்சத்தில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
தற்போது உயிர்கொல்லி நோயாகிய கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக
பொது மக்களின் நலன் கருதி அனுமதி வழங்கலாம்.

ந.க. எண்.369/2020/அ4

மன்றப்பொருள்5 **தீர்மான எண் : 2011** அனுமதிக்கப்பட்டது

குடிநீர் விநியோகப்பணிகளையும் பராமரிப்பு பணிகளையும் தனித்தனியாக ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தி வருவதால் நகராட்சிக்கு அதிகமான நிதிச்செலவினம் ஏற்பட்டு வருவதால் குடிநீர் பணிகளின் விநியோகப்பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான செலவினங்களை குறைத்திடும் நோக்கத்தில் குடிநீர் பம்பிங் செய்யும் பணிக்கான ஒப்பந்தம், குடிநீர் விநியோகப்பணிக்கான ஒப்பந்தம், குடிநீர் குழாய்களில் எற்படும் பராமரிப்பு பணிகள்,குடிநீர் குழாய்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவதால் சாலைகளில் ஏற்படும் பழுதுகளை சீரமைக்கும் பணிகள்(தார்சாலை மற்றும் சிமெண்ட் சாலை) மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்யும் பணிகள் ஆகியவற்றை ஒரே ஒப்பந்த பணியின் மூலம் செய்திடவும் அதற்கான செலவினங்களை மாதந்தோறும் வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைத்து பணிகளுக்கும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விலைவிகித அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளின்படியும் தமிழ்நாடு பொதுப்பணித்துறை விலைவிகித அட்டவணையில் குறிப்பிடப்படாத விலைகளுக்கு கொட்டேஷன் அடிப்படையிலும் விலைகள் பெறப்பட்டு வருடாந்திர பராமரிப்பு பணிகளாக மேற்கொள்ளவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றப்பொருள் 6 **தீர்மான எண் : 2012** அனுமதிக்கப்பட்டது

காயல்பட்டணம் நகராட்சியில் தற்பொழுது 1534 எண்ணம் தெருவிளக்குகள் நகராட்சியின் மூலம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.தற்பொழுது நகராட்சியின் குடியிருப்பு பகுதிகள் விரிவடைந்து வருவதால் அப்பகுதியில் வசிக்கும் பொதமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை நகராட்சியின் மூலம் செய்யவேண்டியது அவசியமாகிறது.மேலும் விரிவடைந்து வரும் பகுதிகளில் பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி தெருவிளக்குகள் அமைக்கப்படவேண்டும் என்று பொதுமக்களின் கோரிக்கையின்படி தெருவிளக்குகள் இல்லாத மின் கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் அமைத்திடவும் அதற்கான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியில் ஈடு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
காயல்பட்டணம் நகராட்சி.